www.StudyGuideIndia.com

AI march-2010

5451

Register Number

# தமிழ்

நேரம் : இரண்டு மணி முப்பது நிமிடங்கள் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

1. கடின பதத்திற்குப் பொருள் தருக : $8 \times \frac{1}{2} = 4$

அ) பார் ஆ) மதி

இ) பழனம் ஈ) அனுதினம்

உ) ஈசன் ஊ) வனம்

எ) சிந்தை ஏ) கேண்மை.

2. சேர்த்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) பழமை + மொழி ஆ) பாங்கு + இழந்து

3. பிரித்து எழுதுக : $2 \times 1 = 2$

அ) சிலம்பொன்று ஆ) இன்பதுன்பம்

4. வாக்கியத்தில் அமைத்து எழுதுக : $3 \times 1 = 3$

அ) மகிழ்ச்சியால்

ஆ) நெடுநேரம்

இ) கட்டுப்பாடு.

5. எவையேனும் இரண்டினைப் பிழை திருத்தம் செய்க : $2 \times 1 = 2$

அ) இந்திய அணி இலங்கையை வென்றன

ஆ) யானை கத்தும்

இ) நீ நாளை வந்தாய்.

6. வினைப் பகுதி தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) வளர்த்தாள் ஆ) சேர்ந்தார்.

7. தொழிற் பெயர் தருக : $2 \times \frac{1}{2} = 1$

அ) பூ ஆ) கல்.

8. குழந்தை தாயால் கண்ணும் கருத்துமாக வளர்க்கப்படுகிறது.

( செய்வினை வாக்கியமாக மாற்றுக ) 2

9. கணிப்பொறி அறிவு இக்காலத்திற்கு அவசியம் அல்லவா ?

( செய்தி வாக்கியமாக மாற்றுக ) 2

[ Turn over

10. மாடு இல்லாத தோடன் ஏழை என இகழப்படுவான்.

( உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக ) 2

11. தருமம் தலையைக் காக்கின்றது. தகுந்த சமயத்தில் உதவுகின்றது.

( எதிர்கால வாக்கியமாக மாற்றுக ) 2

12. நிலத்தை உழுவதற்கு மாடு வேண்டும். கதிரை பிணையலிட்டு அடிப்பதற்கு மாடு வேண்டும்.

( ஒரே வாக்கியமாக மாற்றி எழுதுக ) 2

13. எவையேனும் இரண்டனுக்கு உறுப்பிலக்கணம் தருக : 2 × 1 = 2

அ) அமைந்த

ஆ) நின்ற

இ) செய்தீர்

ஈ) கண்டார்.

14. சீர் பிரித்து அலகிட்டு வாய்பாடு கூறுக : 3

குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்

மாசூர மாய்ந்து கெடும்.

15. எவையேனும் நான்கு சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக : 4 × 1 = 4

அ) ஆண்ட

ஆ) பங்கையக்கை

இ) நெடுங்கோட்டை

ஈ) மயங்கி

உ) பாய் இருள்

ஊ) மந்திரிகள் சாத்திரிமார்.

16. எவையேனும் ஆறு இலக்கண வினாக்களுக்கு விடையளிக்க : 6 × 2 = 12

அ) வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக.

ஆ) அகத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

இ) பண்புத் தொகை புணர்ச்சி விதிகளுள் நான்கினைக் கூறி விளக்குக.

ஈ) பதம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

உ) ஏவலுக்கும் வியங்கோளுக்கும் உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்துக.

ஊ) தொகாநிலைத் தொடரின் வகைகளைக் கூறுக.

எ) இடம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

ஏ) குற்றியலிகரத்தின் இலக்கணம் எழுதி சான்று தருக.

17. அடி பிறழாமல் எழுதுக :

அ) 'நவில்தொறும் ...' எனத் தொடங்கும் குறள். 2

ஆ) 'என்றனன்' எனத் தொடங்கி 'உறுவனே' என்று முடியும் சிலப்பதிகாரச் செய்யுள். 4

இ) 'ஓதலினும் ...' எனத் தொடங்கும் செய்யுள். 4

www.StudyGuideIndia.com

18. எவையேனும் இரண்டு செய்யுட்களுக்குத் திரண்ட கருத்து எழுதுக : 2 × 2 = 4

அ) உளரெனும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

ஆ) கோலநிறை புனல் தாங்கு
குடம் தாங்க மாட்டாமை
ஆலம் அணி கண்டத்தார்
முடிமீது வீழ்த்து அயர்வார்.

இ) அலகுஇல் மூன்றினுள் நடுவ மைந்தனை
நிலவு மூன்றினும் நிரப்ப ஈன்றனள்.

19. கீழ்வரும் பாடலின் பொருள் அறிந்து கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி. 4 × 1 = 4

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதிகல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்
உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா.

- பாரதியார்

வினாக்கள் :

அ) எது பாவம் என்கிறார் ?

ஆ) யார் மேலோராகக் கருதப்படுவர் ?

இ) எது உண்மையென்று அறிதல் வேண்டும் ?

ஈ) எப்படிப்பட்ட நெஞ்சு வேண்டும் ?

20. ஏதேனும் ஒன்றினை இடஞ்சுட்டி விளக்குக : 1 × 3 = 3

அ) "அன்னம் வைகும் வயற்பழனத் தணி
யாரூ ரானை மறக்கலு மாமே"

1. இடம்பெறும் பாடல் பகுதி யாது ?
2. பாடலின் ஆசிரியர் யார் ?
3. ஆரூரான் எனப்படுபவர் யார் ?



www.StudyGuideIndia.com

ஆ) "தம் வளர்ப்புப் பிள்ளையைக் கல்வியிலே
நாட்டங் கொள்ளும்படிச் செய்தார்"

1. வளர்ப்புப் பிள்ளை யார் ?
2. அவரை கல்வியில் நாட்டம் கொள்ளும்படிச் செய்தவர் யார் ?
3. அவரை வளர்த்தவரின் உறவுமுறை என்ன ?

21. எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்க. 6 × 2 = 12

அ) வேள் பாரிக்கு எதன் மூலம் நெற்கதிர்கள் கிடைத்தன ?
ஆ) நல்லநாடு அமைய ஔவையார் கூறும் கருத்து யாது ?
இ) கோடை விடுமுறையை எவ்வாறு கழிக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறுகிறார் ?
ஈ) மாடு என்றால் செல்வம் என்பதை விளக்க வந்த குறள் யாது ?
உ) தர்மம், அதர்மம் எனப்படுவது யாது ? வள்ளுவர் வழி நின்று விளக்குக.
ஊ) பாடங்களை எளிதாகக் கற்றிட கணிப்பொறி எவ்வாறு துணை செய்கிறது ?
எ) மனம் பண்படுவதற்கு வழி என்ன ?
ஏ) அறிவியல் நோக்கு என்றால் என்ன ?

22. ஏதேனும் **ஒன்றனுக்கு** விரிவான விடையளி. 7

அ) ஒவ்வொரு தாய்க்கும் கல்வியறிவு இன்றியமையாததாகக் கருதப்படுவது ஏன் ?
ஆ) எத்தகைய உண்மையைக் கண்டு பெரியவர்கள் தருமம் தலை காக்கும் என்று பேசி வருகின்றனர் ?
இ) தேசிய ஒருமைப்பாடு பற்றிய பாரதியார் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

23. ஏதேனும் **ஒரு** தலைப்பிற்குக் கட்டுரை வரைக. 5

அ) முயற்சி திருவினை ஆக்கும்
ஆ) செய்தித்தாள்
இ) ஒழுக்கம் விழுப்பம் தரும்.

24. ஏதேனும் **ஒன்று** பற்றிக் கடிதம் வரைக : 5

(கடிதத்தில் பெயர், பதிவெண் மற்றும் சொந்த முகவரி ஆகியவற்றை எழுதுதல் கூடாது.)

அ) ஏதேனும் ஓர் அலுவலகத்தில் வேலை கேட்டு ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக.
ஆ) உம் பள்ளியில் நடைபெற்ற விழா குறித்து நண்பனுக்கு/நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.
இ) உம் தெருவில் குடிநீர் சரிவர வராதது குறித்து, குடிநீர் வாரியத்திற்கு ஒரு புகார்க் கடிதம் எழுதுக.

25. கீழ்க்காணும் ஆங்கிலச் சொற்றொடர்களுக்கு மொழியாக்கம் தருக : 1 + 1 + 2

அ) Time and tide wait for none.
ஆ) East or west home is the best
இ) Our school has decided to send me for a competition, on Subramania Bharathiar. I will go to the library to select the book.

www.StudyGuideIndia.com